முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்

**(விகாரி சித்திரை மாதம் 22ம் திகதி முதல் சித்திரை மாதம் 29ம் திகதி வரை மே 05ம் திகதி முதல் மே 12ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தரும பலம் கொண்ட தமிழகமே**
**தலைமைக்கு சிறந்த பாரதமே**
**பெருமைமிக்க பண்பாடுகள் மிகுந்த**
**பாரதம் தமிழகம் தன்னில் நிகழ்வாக**

**2.** **ஆகவே விகாரி தகரின் திங்கள்**
**அறிவிக்க இருபானீர் திகதி மேல் இருபான் நவதிகதி வரை**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முடிய)**
**வகைபட வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**வள்ளல் ஞானி அரங்கன் கேட்க**

**3.** **கேட்கவே சுப்பிரமணியர் யானும்**
**கூறிடுவேன் இந்தவித காலம்**
**திட்டமுடன் தமிழகம் தன்னில்**
**தெரியவரும் இயற்கை வழி சமபலன்**

**4.** **பலமான அரசியல் முடிவு காணா**
**பரதம் தமிழகம் தடுமாறும்**
**களம் கண்ட கட்சி தலைமைகள்**
**கலகமின்றி அமைதி வழி காணவே**

**5.** **காணவே எதிர்கால சூழலில் ஏறும்**
**கட்டாயம் தேற்றம் பலம் காணும்**
**ஞானமிலா தொடர்ந்து வகுப்புவாத**
**நன்மையிலா செயலில் ஈடுபட்டால்**

**6.** **ஈடுபட்டால் தமிழகம் தன் பெருமை**
**இழந்து கலகம் வழி உயிர்ப்பலி**
**மடமைகள் பல கண்டிட நேரும்**
**மத்தியும் தருமசிந்தைபட ஆளுமை**

7. ஆளுமை தயவு கூட்டி தொடர
அகிலம் வியக்க நிலை உயரும்
வலுவான தலைமை வளமும் கண்டு
வையகம் மெச்ச பரதம் வளரும்

8. வளரும் தலைமுறைகள் தானும்
வல்லமை பெறும் வண்ணம்
மலரும் சத்திய சமதர்ம சமூக மலர்ச்சி
மண்ணுலகில் மக்களிடை தெளிவும்

9. தெளிவும் ஞான முதிர்வும் கூடி
தேர்தலில் இனி ஏமாற்றும் சூழல்
இழிவான செயல்பாடுகள் என்பதில்லா
ஏற்றமும் மாற்றமும் காணும்

10. மாற்றம் தரவந்த அரங்க ஞானி
மகத்துவம் அறிந்து வருதல் காண
ஏற்றுமே தருமநெறி வளர்க்க
இந்தியா தமிழகம் இழப்பின்றி நிமிரும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

விகாரி வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

தருமத்தின் பலம் மிகுந்த தமிழக தேசத்திலும் வல்லமைமிக்க பல தலைமைகளால் ஆட்சி செய்யப்பட்ட பாரம்பரியம்மிக்கதும் பெருமைமிக்கதும் பண்பாட்டிற்கு சிறந்ததுமாகிய பாரத தேசத்திலும் விகாரி வருடம் சித்திரை 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முதல் சித்திரை 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த வாரத்தினில் இயற்கையினால் உண்டாகும் சாதக பாதகங்கள் சமபலனாக இருக்கும். பலம்மிக்க அரசியல் முடிவுகளை காண முடியாமல் பாரத தேசமும் தமிழகமும் தடுமாறும் நிலை உருவாகும். தேர்தல் களத்தினில் இருந்திட்ட அரசியல் கட்சிகள் எல்லாம் நாட்டின் நலன் கருதி அமைதியுடன் கலகங்கள் இன்றி செயல்பட்டால் இந்தியாவின் எதிர்காலம் உறுதியாக உயர்வடைந்து தேற்றம் காணும் சூழல் உருவாகும்.

அதைவிடுத்து மீண்டும் மீண்டும் வகுப்புவாத செயல்பாடுகளை தூண்டியும் வகுப்புவாத செயல்பாடுகளில் ஈடுபட்டால் தமிழகமானது தனது பெருமையை இழந்து நாட்டினில் கலகங்கள் உண்டாகி உயிர்பலிகள் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் உருவாகி உயிர்பலிகள் ஏற்படும் நிலையை அடையும்.

மத்தியை ஆளும் மத்திய அரசும் தமது ஆட்சியை தருமசிந்தையுடன் ஆட்சி செய்திட முனைந்திட வேண்டும். மக்கள் மீது தயவுடன் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு மக்களின் மீது கருணையோடு மக்களின் கஷ்டநஷ்டங்களை உணர்ந்து செயல்படுமானால் உலகமே வியக்குமாறு பாரத தேசத்தின் நிலை உயர்வடையும். வலுவான தலைமையை இந்த இந்திய தேசம் அடைந்து உலகமே வியக்கும்படி பாரததேசம் விரைந்து வளர்ச்சியடையும்.

மத்திய அரசின் கருணைமிக்க செயல்பாடுகளினால் வளரும் தலைமுறைகளும் தன்னிலை உணர்ந்து வல்லமை பெறும். நாட்டினில் இளைய சமுதாயத்தினர் வல்லமைகளை பெற்று சத்திய சமதர்ம சமூக மலர்ச்சி உண்டாகும். மக்களிடையே அறிவு தெளிவும் உண்டாகும், ஞானமுதிர்ச்சியையும் மக்கள் அடைந்திடுவார்கள், மக்களிடையே சமூக விழிப்புணர்வும் பெருகிடும். அறிவு தெளிவினை மக்கள் பெறுவதினால் இனி வரும் தேர்தல்களில் மக்களை ஏமாற்றும் சூழல்களும் இழிவான செயல்பாடுகளும் உண்டாகாமல் நாடு முன்னேற்றமும் மக்களிடையே நல்ல மாற்றங்களும் உண்டாகும்.

உலகினில் மாற்றங்களை உண்டாக்கி மக்களை நல்வழிப்படுத்திட வந்திட்ட அரங்கமகா தேசிக ஞானியரின் மகத்துவங்களை அறிந்து அரங்கமகானை நாடி வந்து அரங்கமகானை குருவாக ஏற்றுக் கொண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் தருமநெறிப்படி நாட்டினை வளர்த்திட்டால் இந்தியாவும் தமிழகமும் எந்தவித இழப்பின்றி தலைநிமிர்ந்து வாழும் என தனது வார ஆசி நூல் மூலம் உலகறிய கூறுகின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–

www.agathiar.org மற்றும் www.agathiar.in ல் அரங்கமகா தேசிகரின் செயல்பாடுகளை காணலாம். அரங்கரைப் பற்றி அறிந்து கொள்ள www.youtube.com ல் arangar tv என்ற சேனலிலும் www.arangartv.com லும் காணொளியாக காணலாம். ஆடியோக்களை www.soundcloud.com ல் voice of arangar ல் கேட்கலாம். Mobile Phone : Google Play Store ல் arangar tv App ஐ Download செய்தும் காணலாம். Audio கேட்க soundcloud App ஐ டவுன்லோடு செய்து voice of arangar ல் கேட்கலாம்.